பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 08 வெள்ளிக்கிழமை 22.03.2024 அதிர்வு 234

## போராட்டக்காரர்களின் உடலில் நீர்ச்சத்து குறைவடைகின்றது!

**பரிசோதித்த வைத்தியர் எச்சரிக்கை**

(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் உணவு தவிப்புப் போராட்டத்தில் ஈடுபடும் 04▶




# ரணிலின் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக அருண் சித்தார்த்

## ஐ.தே.க. பிரதித் தலைவர் ரவி கருணாநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்து அதிர்ச்சி அறிவிப்பு




(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)


ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளராக அருண் சித்தார்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை தனியார் மண்டபத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணா நாயக்க இந்த விடயத்தை அறிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதான அமைப்பாளராக முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனே செயற்பட்டு வருகின்றார். 04▶

### 42 மேலதிக வாக்குகளால்

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு!



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் எதிர்க்கட்சிகளால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தனவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேல திக வாக்குகளால் நேற்று தோற்கடிக் கப்பட்டது. 03▶



சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள். அத்தகைய வேலையைச் செய்திருக்கின்றார் ரவி கரு–ணாநாயக்க.

'சக்தி இல்லாமல் சிவனே என்று கிடந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு யாழ். மாவட்ட அமைப்பாளர் நியமனம் என்று அறிவித்து, ஜனாதிபதி ரணி லுக்கு வடக்குக் கிழக்கில் 04▶



# இந்த சபாநாயகர் இந்நாட்டின் சாபக்கேடு

## கஜேந்திரன் நாடாளுமன்றில் விசன உரை




"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வாதிகார ஆட்சியை முன்கொண்டு செல்ல, பொலிஸார் மக்கள் மீது காட்டாட்சியை நடத்த, அவர்களுக்குக் கடுமையான சட்டங்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறு சட்டங்களை சட்டத்துக்கு முரணாக நிறைவேற்றிக் கொடுக்கும் சபாநாயகர் இந்த நாட்டின் சாபக்கேடு."

– இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த ஆண்டு ஜுன் மாதம் வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றுக்காக சென்றிருந்த போது பொலிஸார் அவரை கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அது தொடர்பில் ஏற்பட்ட தகராறில் பொலிஸாரின் குற்றங்களை மறைப்பதற்காக பொலிஸுக்குப் பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸ் , பொலிஸ் திணைக்களம் கூட்டிணைந்து எமது தலைவர் குற்றமிழைத்தமை போன்று பொய்க்குற்றச்சாட்டை சுமத்தி அவர் கொழும்பில் உள்ள தனது இல்லத்திலிருந்து நாடாளுமன்றம் வரத் தயாராகிக் கொண்டிருந்தபோது அவரைக் கைது செய்யப் பொலிஸாரை கிளிநொச்சியிலிருந்து அனுப்பியிருந்தனர்.

இவ்வாறான நிலையில் சபாநாயகருடன் தொடர்பு கொண்டு நாடாளுமன்றம் வந்து என்னுடைய கருத்துக்களை பதிவு செய்த பின்னர் என்னை விசாரணைக்கு அழைத்து செல்ல நீங்கள் பொலிஸாருக்கு அறிவுறுத்த வேண்டும் என எமது தலைவர் வலியுறுத்தினார்.

ஆனால் சபாநாயகர் என்ற தனது அந்தஸ்தை மறந்து, தனது பொறுப்பை மறந்து, நிறைவேற்று அதிகாரத் தரப்பின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான ஓர் எடுபிடியாக, ஓர் அடிமையாக சபாநாயகர் செயற்பட்டிருந்தார்.

இதனால், நீதிக்கு புறம்பான முறையில் எமது தலைவர் கைது செய்யப்பட்டு அவரது சிறப்புரிமை மீறப்பட்டது. இதற்கான நீதி இன்னும் எமது தலைவருக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு பல சம்பவங்கள் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்றபோது ஆளும் கட்சியும் கவலைப்படவில்லை. எதிர்க்கட்சியும் கவலைப்படவில்லை.

தமிழர்கள் என்று வருகின்றபோது இந்த சபையில் இருக்கக்கூடிய ஆளும் தரப்பினரும் எதிர்த்தரப்பினரும் இணைந்தே செயற்பட்டுள்ளனர்.

சபாநாயகருக்கு பதவி தேவை. அதற்காக நிறைவேற்று அதிகாரத்தில் இருப்பவர்களின் கால்களைப் பிடித்துக் கொண்டு இருக்க வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி, ராஜபக்ஷவுடன் உள்ள கொள்ளைக்கும்பலை பாதுகாக்கும் பணியை செய்வதனால் அந்தப் பணியை செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வேண்டப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் செய்து கொடுக்க வேண்டிய கடப்பாடு உள்ளவராக சபாநாயகர் மாறியுள்ளார்.

அதன் காரணமாக அவர் ஜனாதிபதிக்கு வேண்டியவாறு நாட்டின் சட்டங்களை வளைத்துப்போடுகின்ற அனைத்து சமூக விரோத, ஜனநாயக விரோத அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவாக இருந்து சபையைத் தவறாக வழிநடத்துகின்றார். அவர் பதவி வெறி பிடித்தவராகச் செயற்பட்டார்.

கடந்த காலங்களில் இவ்வாறு தமிழர்களுக்கு எதிராக முடிவுகளை எடுக்கிற போது இங்குள்ள எல்லோருக்கும் அது மகிழ்ச்சியாக இருந்தது.

நாடாளுமன்றம் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறை சட்டங்களை இயற்றுகின்றபோது இங்குள்ள பேரினவாதிகளும் சிங்கள மக்களும் அவற்றுக்கு ஆதரவு தெரிவித்து கரகோஷம் எழுப்பினார்கள்.

இன்று இந்த நாட்டிலுள்ள 2 கோடி மக்களினதும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை நசுக்கும் இணையவழி பாதுகாப்பு சட்டத்தை உயர் நீதிமன்றத்தின் விதப்புரைகளையும் மீறி சட்ட விரோதமாக நிறைவேற்றத் துணிந்த இந்த சபாநாயகர் இந்த சபையின் காவலரா என்பதை மக்கள் பிரதிநிதிகள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வாதிகார ஆட்சியை முன் கொண்டு செல்ல பொலிஸார் மக்கள் மீது காட்டாட்சியை நடத்த அவர்களுக்கு கடுமையான சட்டங்கள் தேவைப்படுகின்றன.

இவற்றை சட்டத்துக்கு முரணாக நிறைவேற்றிக்கொடுக்கும் சபாநாயகர் இந்த நாட்டின் ஒரு சாபக்கேடு. தனது வெட்கம் கெட்ட வேலைக்காக அவர் சபாநாயகர் பதவியிலிருந்து மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்ய வேண்டும்" – என்றார்.

# அத்தியாவசிய உணவுப் பொருள்கள் தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படும்

## கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் தெரிவிப்பு

"எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அத்தியாவசிய உணவுப் பொருள்களை நியாயமான விலையில் தட்டுப்பாடு இன்றி பெற்றுக் கொள்ளக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயி மற்றும் நுகர்வோர் ஆகிய இருவரையும் பாதுகாக்கும் முறைமையின் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்."

– இவ்வாறு கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் இதனைத் தெரிவித்தார். இதனோடு அவர் மேலும் தெரிவிக்கையில் –

"விவசாய அமைச்சின் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கான சூழல் தற்போது தயாராகியுள்ளது. நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் பாதுகாத்து முன்னோக்கிச் செல்ல ஒரு முறைமை தயாராகி வருகிறது. அண்மைய காலமாக காய்கறிகள், பழங்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. விவசாய அமைச்சு என்ற வகையில், காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி, சந்தையில் காய்கறிகள் மற்றும் பழங்களின் விலையை பழைய நிலைக்கு கொண்டுவர முடிந்தது.



அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி பயிர் சேதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், மக்களின் புரதத் தேவைக்காக இறைச்சி மற்றும் முட்டைகளை உற்பத்தி செய்து நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை விவசாய அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. கால்நடை உற்பத்தியை அதிகரிக்க சுகாதார திணைக்களம் மற்றும் 09 மாகாண சபைகள் இணைந்து கால்நடை வளர்ப்பின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

மேலும், பிரான்ஸ் நாட்டின் உதவியுடன் திரவ பால் உற்பத்தியை அதிகரிக்க 06 தொழிற்சாலைகளைத் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதில் இதுவரை 03 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. வீழ்ச்சியடைந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். அந்த நாடு இன்று மக்கள் வாழக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோர் அத்தியாவசியப் பொருள்களைத் தட்டுப்பாடு இன்றி நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளும் சூழலை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் விவசாயக் கொள்கை மூலம் நுகர்வுக்கு தேவையான அரிசியை உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

இதன்படி அடுத்த மாதம் 6 ஆம் திகதி தேசிய புத்தரிசி விழாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஸ்ரீமஹா போதி முன்னிலையில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன."

– என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**சபாநாயகருக்கு...**

பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் அதற்கு எதிராக 117 வாக்குகள் அளிக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டம் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை மீறி சபாநாயகரால் அனுமதிக்கப்பட்டமை, பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் அரசமைப்பை மீறி சபாநாயகர் செயற்பட்டமை ஆகிய இரண்டு பிரதான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றப் பிரதிப் பொதுச்செயலாளர் ஷமிந்த குலரத்னவிடம் கடந்த 5ஆம் திகதி கையளித்தன.

சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 44 எம்.பிக்கள் கையெழுத்திட்டிருந்தனர்.

இதையடுத்து ஒழுங்குப் பத்திரத்தில் சபாநாயகருக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உள்வாங்கப்பட்டதுடன் மார்ச் 19, 20 ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுப்பது என்று கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு கடந்த 19 ஆம் திகதி விவாதத்துக்கு எடுக்கப்பட்ட நிலையில் மீண்டும் கூடிய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேலும் ஒரு நாளை வழங்கி 21 ஆம் திகதியும் விவாதத்தை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் கடந்த 19ஆம் திகதி முதல் நேற்று 21ஆம் திகதி வரை மூன்று நாட்கள் விவாதம் இடம்பெற்றது. நேற்று மாலை 4.30 மணிக்கு விவாதம் முடிவுக்கு வந்தது.

அதனைத் தொடர்ந்து பிரேரணை மீது வாக்கெடுப்பை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கோரிய நிலையில், சபைக்குத் தலைமை தாங்கிய பிரதிச் சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ வாக்கெடுப்புக்காக கோரம் மணியை ஒலிக்க விடுமாறு உத்தரவிட்டார். அதன பிரகாரம் மாலை 4.40 மணியளவில் இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இந்த வாக்கெடுப்பின்போது பிரேரணைக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே .வி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பிக்கள் ஆதரவாக வாக்களித்தனர். எனினும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரான சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி. சபையில் இருக்கவில்லை.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக அரசுடன் இணைந்து எதிரணிப் பக்கத்தில் சுயாதீனமாகச் செயற்படும் ஏ.எல்.எம். அதாவுல்லா, துமிந்த திஸாநாயக்க, நிமல் லான்ஸா உள்ளிட்ட எம்.பிக்கள் வாக்களித்ததுடன் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஏ.எச்.எம். பௌசி, வடிவேல் சுரேஷ் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

இந்நிலையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இதேவேளை, சிறைப்படுத்தப்பட்டிருக்கும் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றாத போதிலும் அவர் வாக்களிப்பில் கலந்து கொண்டு பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தார்.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கட்சித் தலைவர்களான அநுரகுமார திஸாநாயக்க, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட 33 பேர் கலந்துகொண்டிருக்கவில்லை.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இரகசியம் பரகசியம்...**

தப்பித்தவறி கிடைக்கக்கூடிய கணிசமான வாக்குகளையும் தகர்த்தெறிந்திருக்கின்றார் ரவி கருணாநாயக்க.

இந்த விடயம் இன்றைய ஆசிரியர் தலையங்கத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டு இருக்கின்றமையால் அது குறித்து அதிகம் விரிக்காமல், ஒரு விவகாரத்தை மட்டும் குறிப்பிட்டு, அடுத்த விடயத்துக்குப் போகலாம் என்று நினைக்கிறேன்.

என் நினைவு சரி என்றால், இது, நல்லாட்சி அரசின் பிற்காலத்தில் – ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு, மஹிந்தர் 52 நாள்கள் பிரதமராக இருந்து பதவி இறங்கிய பின்னர் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 எம்.பிக்களும் கொடுத்த முண்டில் ரணிலின் அரசு நின்று பிடித்த காலத்தில் – நடந்தது.

அப்போது பிரதமர் ரணில் வடக்கே வந்திருந்தார். ஊடகவியலாளர்களையும் தனியாகச் சந்தித்தார். யுத்தம் முடிந்து எட்டு, ஒன்பது வருடங்கள் கழிந்தும், யுத்த காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து, நீதி முறையான விசாரணை நடக்கவில்லை என்று அந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணிலைக் குறை கூறி நான் நேரடியாக விமர்சித்திருந்தேன். தமிழில் விசாரணைகளை நடத்துவதற்குப் போதிய புலனாய்வு அதிகாரிகள் இல்லை என்று சாக்குப் போக்குக் கூறிச் சமாளித்தார் பிரதமர் ரணில். அந்த நிகழ்வில் ரணிலின் பதில்களை தமிழாக்கம் செய்தார் அவருடன் கூடவே இருந்த கூட்டமைப்பு எம்.பியான சுமந்திரன்.

அதன் பின்னர் சுமந்திரனை அதே ஹோட்டலில் தனியாகச் சந்தித்தபோது பலதும் பத்தும் விடயங்கள் பேசினோம். சர்ச்சைக்குரிய பேர்வழியான அருண் சித்தார்த், தாம் பிரதமர் ரணிலுடன் நிற்கும் படத்தை சமூக ஊடகங்களில் பகிர்ந்திருக்கின்றமை குறித்து நான் பிரஸ்தாபித்தேன். அப்போது சுமந்திரன் பதில் தந்தார்.

“ஆம். அவர் அமைச்சர் ராஜிதவுடன் ஒட்டிக் கொண்டுதான் வந்திருக்கிறார். நான் அது குறித்து ராஜிதவையும் வைத்துக்கொண்டு, அந்தப் படத்தைக் காட்டி ‘இவர் யார் தெரியுமா?’ என்று பிரதமரிடம் கேட்டேன். அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. ‘இவர்கள் கூட்டி வந்தார்கள். சேர்ந்து படம் எடுத்தேன்’ என்றார் பிரதமர். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ‘நான்தான் ஆவா குழு’ என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்த குழப்பக்காரர் இவர் என்று பிரதமரிடம் தெரிவித்தேன். அவர் ஆழமாக கவனித்து அந்த விடயத்தை உள்வாங்கிக் கொண்டார்” – என்ற சாரப்பட அப்போது சுமந்திரன் பதிலளித்தார் என்று எனக்கு நினைவு.

சுமந்திரனின் அந்த ஆலோசனையை நல்லாட்சியுடன் மறந்திருப்பார் பிரதமர் ரணில். இப்போது ராஜபக்ஷக்களை அரவணைக்கும் அவருக்கு அருண் சித்தார்த்தை அரவணைப்பது அப்படி ஒன்றும் பெரிய விவகாரம் இல்லை.

இந்த நியமனம் தொடர்பில் என் நண்பர் ஒருவர் – தந்தை பெரியார் மீது பற்று மிக்கவர் – தொலைபேசியில் இப்படிக் கூறினார்:–

“கடைசியில் தந்தை பெரியாரின் சமூக நீதி வென்றிருக்கின்றது என்று மகிழலாம். சமத்துவம் நிலைநாட்டப்பட்டிருக்கின்றது என்று சந்தோஷப்படலாம். சாதிய அடக்குமுறை ஒழிக்கப்பட்டிருக்கின்றது என்று திருப்திப்படலாம். ‘எலைட்’டுகளுக்கு மட்டுமே கட்சியின் மேலிடம் என்ற அமைப்பில் யாழ்ப்பாணத்தில் திருத்தம் போதிக்கப்பட்டிருக்கின்றது” என்றார் அவர்.

இப்படியும் விடயத்தை பார்க்கலாம் தான்.

* * *

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை சட்ட முறையற்ற விதத்தில் நிறைவேற்றிய சபாநாயகருக்கு எதிராக அந்தக் காரணத்தை முன்னிறுத்தி நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டு விட்டது.

ஏற்கனவே இவ்விடயத்தை ஒட்டி உயர்நீதிமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்பதில்லை என்று தெரிவித்து, உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

ஆகையினால் சபாநாயகரின் கை ஓங்கி விட்டது, அவர் தப்பிவிட்டார் என்று முடிவு செய்து விடாதீர்கள்.

இன்னும் விவகாரம் இருக்கின்றது. இச்சிக்கல் சபாநாயகருக்குக் காலைச் சுற்றிய பாம்பு. இலகுவில் அது விலகிவிடாது என்பதுதான் நிஜம்.

என்ன, சுமந்திரன் தமது அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்காமல் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தமையை ஆட்சேபித்து, அந்த விடயத்தை மீள் பார்வைக்கு அனுமதிக்கும்படி கோரி, விண்ணப்பித்துள்ளார், அதன் மூலம் சபாநாயகருக்குப் பிரச்சினை வரும் என்று கூறுகின்றீர்களா என நீங்கள் கேட்பது புரிகின்றது.

அதுவல்ல விடயம். அதுவும் விடயம் தான், ஆனால் அதையும் தாண்டியும் ஒரு முக்கிய விவகாரம் உள்ளது.

சுமந்திரன் தமது அடிப்படை உரிமை மீறல் மனுவை மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் நிராகரித்திருக்கின்றமையால், அது தொடர்பில் ஐந்து நீதியரசர்கள் ஆயத்தின் முன்னால் தமது மனுவை மீள்பார்வை செய்யும் படி கோரியுள்ளார்.

அந்த விண்ணப்பம் தொடர்பில் பிரதம நீதியரசர் என்ன முடிவு எடுக்கப் போகின்றார் என்பது தெரியவில்லை.

ஆனால், இதற்கிடையில் சுமந்திரனின் மனு நிராகரிக்கப்படுவதற்கு முன்னரும், நிராகரிக்கப்பட்ட பின்னருமாக இதே போன்ற நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் பிற பொதுத் தரப்புகளினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றை வரும் திங்களன்று காலையில் ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர் நீதிமன்ற ஆயத்தின் முன்னால் பரிசீலனைக்கு எடுக்க நீதிமன்றம் தீர்மானித்து, அறிவித்திருக்கின்றது.

நீதியரசர்கள் துரைராஜா, நவாஸ், சமயவர்த்தன, ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி ஆகிய ஐந்து நீதியரசர்கள் ஆயமே இந்த நான்கு மனுக்களையும் திங்களன்று பரிசீலனைக்கு எடுக்கவிருக்கின்றது.

இந்த ஐந்து நீதியரசர்கள் ஆயத்தில் கடைசியில் இருக்கும் இரு நீதியரசர்கள் தான் – ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி இருவரும்தான் – சுமந்திரனின் அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலனைக்கு ஏற்காமல் நிராகரித்த மூன்று நீதியரசர்கள் ஆயத்தில் இருந்தவர்கள். அதில் சிரேஷ்ட நிலையில் இருந்த மூன்றாவது நீதியரசரான பிரியந்த ஜயவர்த்தன பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்று விட்டார்.

தனது மீள்பார்வைக்கான விண்ணப்பத்தையும் திங்களன்று இதே ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயத்தின் முன்னால் மற்றைய நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்களுடன் சேர்ந்து விசாரிக்கும்படி கோரும் மனு ஒன்றை சுமந்திரன் தரப்பு இன்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் எனத் தெரிகின்றது.

ஆக, நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நிறைவேறியதாக தம்மிஷ்டப்படி சான்றுரைத்த சபாநாயகருக்கு இன்னும் சிக்கல் காத்திருக்கின்றது – உயர் நீதிமன்றத்தில் இருந்து.

---

**ரணிலின் கட்சியின்...**

அருண் சித்தார்த்தின் நியமனம் குறித்து விஜயகலா மகேஸ்வரனுக்கோ, கட்சியின் ஏனைய வடக்குப் பிரமுகர்களுக்கோ, பிரதிநிதிகளுக்கோ கட்சியின் தலைமையகத்திலிருந்து எதுவுமே இதுவரை அறிவிக்கப்படவில்லை எனத் தெரிகின்றது.

நேற்று இந்த அறிவிப்பு விடுக்கப்பட்ட கூட்டத்தில் இதுவரை காலமும் கட்சியின் ஆதரவாளர்களாக உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக இருந்த எவரும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியையும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும் கொச்சையாக விமர்சித்து வருபவருக்கு கட்சியின் மாவட்ட அமைப்பாளர் நியமனமா எனக் கட்சியின் வடக்கு ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி உருவாகியுள்ளது என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

**போராட்டக்காரர்களின்...**

4 பேரின் உடலில் நீரின் அளவு குறைவடைந்து வருகின்றது என்று அவர்களைப் பரிசோதித்த வைத்தியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். குடாப் பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரி கடந்த செவ்வாய்க்கிழமை நான்கு மீனவர்கள் யாழ். இந்தியத் துணை தூதரகத்துக்குச் செல்லும் வாயிலில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்று வியாழக்கிழமை மாலை போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்களின் உடல் சோர்வடைந்த நிலையில் குறித்த இடத்துக்கு வைத்தியர் வரவழைக்கப்பட்டு உடல் நிலை தொடர்பில் பரிசோதிக்கப்பட்டது.

மேற்படி நால்வரையும் பரிசோதித்த வைத்தியர், மீனவர்களின் உடலில் நீரின் அளவு குறைவடைந்து செல்வதால் சோர்வு ஏற்படுகின்ற நிலையில் நீரை அதிகளவு அருந்துமாறு கோரிக்கை விடுத்தார்.




| | |
|---|---|
| **ROASTED CHILLI POWDER**<br>(Includes 14 spices)<br>250 G - 950/=, 100G - 395/= | **SPECIAL CUMIN SEED POWDER**<br>100G - 560/= |
| **UNROASTED CURRY POWDER**<br>250G - 850/=, 100G - 380/= | **CORIANDER POWDER**<br>100 G NEW - 190/= |
| **CHILLI POWDER**<br>100G - 290/= | **BLACK PEPPER POWDER**<br>100 G |

**FREE DELIVERY TO SPECIFIC AREAS**

**DELIVERY WILL BE CHARGED TO OTHER AREAS**

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தன் தலையில் மண் போடும் யானை

'யானை தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுமாம்' - என்று பேசுவோம்.

அது இலங்கை அரசியலில் நேற்று கனகச்சிதமாக அரங்கேறி இருக்கின்றது.

யானைக் கட்சித் தலைவர், தமிழர்களின் முழு ஆதரவையும் - வாக்குகளையும் - இழக்குமாற்போல தன் தலையில் தானே மண் அள்ளிப் போடுகின்ற காரியத்தை ஆற்றியிருக்கின்றார்.

அதன் விவரத்துக்குள் இறங்க முன்னர், இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். நேற்று ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு மொட்டுக் கட்சியின் மூத்த பிரமுகர் பஸில் ராஜபக்ஷ செவ்வி ஒன்றை வழங்கி இருந்தார். அந்தச் செவ்வியில் பஸில் ராஜபக்ஷ கடந்த பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் தமது கட்சிக்கு கிடைத்த பெருவெற்றி எப்படிச் சரிந்தது என்பதற்கான காரணத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றார்.

அபரிமிதமான மக்கள் ஆதரவும், அதனால் கிடைத்த கட்டுமற்றற்ற அதிகாரமும்தான் எம்மை - எங்கள் பாதையை - குழப்பின என்று அவர் வெளிப்படையாகக் கூறிகிறார். பெரும்பாலும் எல்லா கேள்விகளுக்குமான அவரின் பதில் எல்லையற்ற அதிக அதிகாரம், கட்டற்ற செல்வாக்கு நம்மை தவறிழைக்க வைத்து விட்டன என்று ஒப்புக் கொள்வதாக அமைந்தது.

இப்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் நிலையும் அதுதான். தாம் சுவீகரித்த மக்கள் செல்வாக்கினால்இந்த அதிகாரம்அவருக்குக்கிடைக்கவில்லை. 'சரஸ்வதி சபதம்' படத்தில் தெருப் பிச்சைக்காரி, பட்டத்து யானை மாலை அணிவித்தமையால் மகாராணியானமை போல, ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தப் பதவி கிடைத்தது. அதிகாரம் எதிர்பாராமல் கைக்கு அதிர்ஷ்டவசமாக வந்து கிடைத்ததால் அவரும் கண் மண் தெரியாமல் செயல்படுகின்றார். அவர் மட்டுமல்லர், அவரைச் சூழ நிற்கும் - ஏற்கனவே மக்களால் நிராகரிக்கப்பட்ட - பலரும் கூட அப்படி அவருடன் ஒண்டிக் கொண்டு, அவரது அதிகாரத்தைத் தாமும் சுவீகரித்து, திக்கு, திசை தெரியாமல் செயப்படுகின்றனர்.

பஸில் ராஜபக்ஷ இப்போது குறிப்பிடுகின்றமை போல எதிர்பாராத அந்த அதிகாரம் துஷ்பிரயோகங்களுக்குதான் வழி வகுக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ் வருகின்றார். அதனை ஒட்டி அவரின் உதவியாளர் ரவி கருணநாயக்கா ஏற்கனவே நேற்று யாழ்ப்பாணம் வந்துவிட்டார்.

அவரது நேற்றைய யாழ். அறிவிப்பு - அதுவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று யாழ் வர இருக்கையில் விடுத்துள்ள அறிவிப்பு - அவர்களின் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பதவி பற்றிய அறிவிப்பு - அதிகாரம் கண்களை மறைத்ததால் செய்த ஒன்று போல தோன்றுகின்றது. யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போடும் விதத்தில் செய்த அரசியல் வேலை இதுதான்.

தமிழ் தேசியத்திற்கும், அந்தத் தேசியத்தைக் காக்கும் போராட்டத்துக்கும் எதிரான மிக மோசமான பேர்வழி என ஒட்டுமொத்த ஈழத் தமிழர் தாயகத்தினாலும் கருதப்பட்ட ஒருவரைத் தமது கட்சியின் யாழ் மாவட்டத் தேசிய அமைப்பாளர் என அறிவிப்பதன் மூலம் ஐ.தே.கட்சி தமிழ் மக்களுக்குச் சொல்ல விழையும் செய்திதான் என்ன?

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களை வாக்களிக்காமல் பகிஷ்கரிக்க வழி நடத்தியமை மூலம், அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மண் கவ்வ வைத்த விடுதலைப் புலிகளின் செயல் நியாயமானதுதான் என்பதை 19 ஆண்டுகள் கழித்து வடக்கில் தான் செய்த கட்சியின் நியமனம் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தி இருக்கின்றது ரணிலின் கட்சி.

தமிழ்த் தேசியத்தின் இருப்பை அழிப்பதற்காக சர்வதேச வலைப் பின்னல் ஒன்றை ரணில் பின்னுகின்றார் என்ற விளக்கத்தைக் காட்டித்தான் அப்போது அந்தத் தேர்தல் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளை புலிகள் மேற்கொண்டனர்.

தமிழ் தேசத்தின் விரோதி ஒருவரை தாம் ஜனாதிபதியாக இருக்கும்போது தமிழர் பிரதேசத்திற்கான தமது கட்சியின் அமைப்பாளராக இப்போது நியமிக்கும் ரணிலின் தரப்பு, அப்போது புலிகள் குற்றம் சாட்டியமை போல தமிழ் தேசியத்துக்கு எதிரான சர்வதேச வலை பின்னலை நிச்சயம் நிலைநிறுத்த நடவடிக்கை எடுத்துதான் இருக்கும். புலிகளின் அன்றைய நடவடிக்கையை இப்போதும் தனது செயற்பாடு மூலம் நியாயப்படுத்துகின்றது ரணிலின் தரப்பு.



# கைதான 32 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்





**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த 32 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் தமிழகத்தில் இருந்து வந்து நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இதேபோன்று அத்துமீறி மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு விசைப்படகுகளையும் அதிலிருந்த ஏழு மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக மொத்தமாக இந்திய மீனவர்கள் 32 பேர் 5 படகுகளுடன் சிறைப் பிடிக்கப்பட்டு மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 25 மீனவர்களும் ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தி அடுத்த மாதம் ஏப்ரல் 5 திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 7 மீனவர்களும் இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நாட்டின் பணவீக்கம் பெப்ரவரியில் வீழ்ச்சி

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் பெப்ரவரி மாதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கடந்த ஜனவரி மாதத்தில் 6.5 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான பணவீக்கம் பெப்ரவரி மாதத்தில் 5.1 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

எவ்வாறாயினும், உணவு பணவீக்கம், கடந்த ஜனவரி மாதத்தில் 4.1 சதவீமாக காணப்பட்ட நிலையில், பெப்ரவரி மாதத்தில் 5 சதவீமாக சற்று அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

# வவுனியா விபத்தில் இரண்டு பேர் காயம்

**(கே.வசந்தன்)**



வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, வைரபுளியங்குளம், ரயில் வீதியில் நேற்று மதியம் இவ்விபத்து இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் ரயில் நிலைய வீதி ஊடாகச் சென்ற ஓட்டோ கதிரேசு வீதியில் திரும்ப முற்பட்ட வேளையில் வைரவபுளியங்குளத்தில் இருந்து வவுனியா நகரம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இரு வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

விபத்து தொடர்பில் வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# உலக நீர் தினம் - மார்ச் - 22 - 2024

இன்று உலக நீர் தினமாகும். பிறக்கும் எல்லா உயிருக்கும் இன்றியமையாத உயிர் நாடியாக விளங்குவது தண்ணீர். “நீரின்றி அமையாது உலகு” என்ற வள்ளுவர் வாக்கில் புதைந்திருக்கும் உண்மையை இந்த உலகில் வாழும் உயிர்கள் யாவும் உணரும்.

### குடிநீரின் மகத்துவம்

நம் உடலியக்க செயற்பாடுகள் அனைத்துக்கும் நீர்தான் முக்கியமானது. பாதுகாப்பான குடிநீரிலுள்ள கனிமங்களின் கிடைப்பனவுதான் ஆரோக்கியமான உயிர்வாழ்வுக்கு அடிப்படையானதாகும். உணவில் உள்ள சத்துத் தாதுக்களை தேவையான உறுப்புகளுக்கு எடுத்துச் செல்லவும் கழிவுகளை வெளியேற்றவும் நீர் அவசியமாகும். உயிரற்ற பொருள்களின் தூய்மையை பேணவும், உயிருள்ள அனைத்து ஜீவன்களதும் இயக்கத்துக்கும் ஆதாரம் நீரே ஆகும்.

### குடிநீர் நெருக்கடி

பூமியின் மேற்பரப்பில் 71 சதவிகிதப் பிரதேசத்தில் நீர் உள்ளடக்கியிருந்தாலும் 4 சதவிகிதம் மட்டுமே நன்னீராகும். அதிலும் 0.5 சதவிகிதம் மட்டுமே மனிதன் பருகுவதற்கு உகந்தது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் மனிதன் உயிர்வாழ்வதற்கு ஆதாரமான இவ் முக்கிய வளமானது இன்று பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. இதன் தேவை அதிகரித்துச் செல்லும் அதேவேளை அதன் அளவும் தொடர்ச்சியாக அருகி வருகின்றது.

இன்று உலகில் 2.1 பில்லியன் மக்களுக்கு இன்னும் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை. மற்றும் உலக மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் பேர் தண்ணீர் பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆண்டு தோறும் ஐந்து வயதுக்கு உட்பட்ட 340,000 க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 800,000 க்கும் அதிகமானோர் பாதுகாப்பற்ற நீர் மற்றும் போதிய சுகாதாரம் இன்மையால் ஏற்படும் நோய்களால் இறக்கின்றனர் என ஐ.நா. சபை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனாலேயே நீரை அடிப்படை உரிமையாக்கி உள்ளனர்.

### உலக நீர் தினம் இன்று

பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐ.நா. மாநாட்டின் தீர்மானத்துக்கு அமைவாக மார்ச் 22 ஆம் திகதியை உலக நீர் தினமாக ஐ.நா. பொதுச் சபை பிரகடனம் செய்தது.

அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் விசேட தொனிப் பொருளுடன் இத்தினம் நினைவு கூரப்பட்டு வருகிறது. இவ்வாண்டு “அமைதிக்கான நீரை மேம் படுத்துதல்” என்ற கருப்பொருளை முதன்மைப்படுத்தி நீர் தினம் நினைவு கூரப்படுகிறது. நீர் மாநாட் டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுடன் நெருக்கமாக இணைந்திருக் கும் இந்த ஆண்டுக்கான தொனிப் பொருள், அமைதி மற்றும் நிலையான வளர்ச்சியை வலியுறுத் தியுள்ளது.



அ.அன்ரன் கமிலஸ் M.Phil
பொறுப்பதிகாரி,
தேசிய சமூக நீர்வழங்கல்
திணைக்களம், கிளிநொச்சி.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் மற்றும் உலகின் 90 சதவீத இயற்கை பேரழிவுகள் தண்ணீர் தொடர்பானவைஎருபவ் அத்துடன் அமைதி மற்றும் மோதலைத் தீர்ப்பதில் நீரின் பங்கு குறித்தும் ஐ.நா. பொதுச்சபையின் இவ்வாண்டுக்கான உலக நீர் தினம் தொடர்பான அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதில் “காலநிலை மாற்றம், மாசடைதல் மற்றும் தண்ணீருக்கான அதிகரித்து வரும் தேவை ஆகியவை நிலையான நீர் முகாமைத்துவத்துக்கு எப்போதும் பெரிய சவால்களைச் சேர்க்கின்றன. இன்று உலகின் சில பகுதிகளில் நீர் ஆதாரங்களின் விநியோகம் மோதலுக்கு காரணமாக மாறும் சாத்தியம் உள்ளது. சர்வதேச சமூகம் இந்தச் சவாலை எதிர்கொள்ள வேண்டும் என்றும் தண்ணீர் ஒத்துழைப்பு, வளர்ச்சிக்கான ஆதாரமாகவும் அமைய வேண்டும்” எனவும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### வெப்பநிலை அதிகரிப்பும் அதன் பாதிப்பும்

இவ்வாண்டு ஆரம்பம் முதல் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் கடும் உஷ்ணமான வானிலை நிலவுகிறது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை வெப்பநிலை மேலும் உயர்வாகவே இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டு, எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே தற்போது நிலவுகின்ற கடும் வெப்பநிலை காரணமாக ஏற்படும் தொடர்ச்சியான ஆவியாக்கம் எமது பிரதேசத்தில் காணப்படும் தரை மேற்பரப்பு மற்றும் தரைக் கீழ் நீர் நிலைகளின் நீரின் இருப்பை அருகச் செய்யும். இந்தப் பின்னணியில் நீருக்கான தேவையும் அதிகரிக்கும் இதனால் கட்டுப்பாடில்லாத நீர் பாவனையால் விரைவில் பெரும் நீர் நெருக்கடி நிலைமைகளை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும்.

தொடர்ச்சி▼

# உலக நீர் தினம் - மார்ச் - 22 - 2024

**தொடர்ச்சி▲**

வடக்கு மாகாணத்தின் தரைக்கீழ் நீரின் அளவு சடுதியாக குறைவடைந்து செல்கின்றது. எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு பின்னரே இங்கு கன மழைக்கான சந்தர்ப்பம் இருப்பதால் தரைக்கீழ் நீரின் கிடைப்பனவு பெரும் சவாலானதாக அமையும். இப்பாதிப்பு யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடிநீர் கிணறுகளில் நீர் இல்லாமை மற்றும் உவராகின்ற நிலைமைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும். எனவே இந்த மோசமான நிலைமையை உணர்ந்து நீரைச் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

**நீர் பாதுகாப்பு**

தொடர்ச்சியாக நீருக்கான தேவை அதிகரித்துச் செல்கின்றன. எனவே அருகிச் செல்லும் வளத்தை மக்கள் தற்போது எவ்வாறு பாவிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே எதிர்கால மக்களின் வாழ்வு அமையுமென குறிப்பிடப்படுகின்றது. குடிநீர் தீர்ந்து போகின்ற ஒரு வளம் என்பது பற்றிய உலகளாவிய விழிப்புணர்வு தற்போது ஏற்பட்டுள்ளது. அதனால், தற்போதைய குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் அதேவேளை எதிர்கால தேவையையும் கருத்தில் கொண்டு நிலைத்து நிற்கும் வளப்பயன்பாட்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நீர்வள முகாமைத்துவம் தொடர்பாக சர்வதேச நீர் பாதுகாப்பு நடவடிக்கைகள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**நீர் வழங்கல் திட்டங்கள்**

இலங்கையில் தேசிய ரீதியில் பல்வேறு நீர்வழங்கல் திட்டங்கள் மூலம் மக்களுக்கான கணிசமான குடிநீர் தேவை நிவர்த்தி செய்யப்பட்டாலும் வடக்கின் பாரிய நீர் வழங்கல் திட்டங்கள் எவையும் நிரந்தரமான திட்டங்களாக இறுதி செய்ய முடியாத நிலைமையை காணமுடிகின்றது.

இந்த விடயம் கடந்த பல தசாப்தங்களாக பேசு பொருளாக மட்டுமே உள்ளது. இத் தொங்கு நிலைமைக்கு உள்ளூர் அரசியல்வாதிகளின் அரசியல் துருப்புச் சீட்டாக இவ்விடயம் கையாளப்பட்டமைதான் காரணம் என்பது மக்கள் பக்க அங்கலாய்ப்பாகும்.

**நீருக்கான விழிப்புணர்வு**

நீரின் அருமையை பற்றியும் நீரை சேமிப்பதன் அவசியத்தைப் பற்றியும் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இன்றியமையாதது. நீர் வளத்தைப் பற்றிய மக்களின் எண்ணங்களில் மாற்றத்தைக் கொண்டு வருவது உடனடியாக தொடங்கப்பட்டு, ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். "போதையில் உள்ளவரின் குருதியில் உள்ள நம்பிக்கைகூட போத்தலில் உள்ள குடிநீரில் இல்லை" என்ற கருத்து நிலவுகின்ற மோசமான நிலைமைக்கு உள்ளாகியுள்ளோம். சுத்திகரிக்கப்பட்டதாக வீதி வீதியாக நீரினை கூவி விற்பனை செய்கின்ற நவீன வியாபாரப் பொருளாக உள்ள குடிநீரின் நிலைமை பரிதாபத்துக்கு உரியது.

அவை எந்த தரப்படுத்தலுக்கும் உட்பட்டவை என்ற உத்தரவாதமில்லாதவை. சுத்திகரிக்கப்பட்டதாக கூறி அனைத்து அடிப்படைக் கனிமங்களும் நீக்கப்பட்ட வெற்று நீரை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வது ஆரோக்கியமானதல்ல.

இப்புவியிலே முதல் உயிரினம் தோற்றம் பெற்றது நீரில்தான் என்ற உண்மைத் தத்துவம் கால மாற்றத்தின் பயனாக இன்று உயிரினங்கள் வாழ்வதற்கு சவால் ஏற்படுத்தும் அளவுக்கு மாற்றப்பட்டுவிட்டது. இதில் நாம் அனைவரும் பங்காளர்கள்.

தற்போது எதிர்கொண்டுள்ள மிக நெருக்கடியான சமூக – பொருளாதார சவால்களுடன், நிலைபேண்தகு அபிவிருத்திக்கான உபாயங்களும், நீர் வளத்தைப் பாதுகாத்து நாளைய வாழ்வுக்கான இருப்பை உறுதிப்படுத்த ஒன்றுணைந்து, "ஊர் வளம் பெற, பார் வளம் பெற, நீர் வளம் காப்போம்" என்று இன்றைய நீர் தினத்தில் உறுதி பூணுவோம்.

# திருகோணமலை விபத்தில் மட்டக்களப்பு இளைஞன் பலி

**(எச்.ஹலீம்)**

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பூநகர் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றைய நபர் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த மேற்படி இருவரும் மோட்டார் சைக்கிளில் திருகோணமலைக்கு வந்து மீண்டும் மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துள்ளார்கள். இதன்போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மின்கம்பத்துடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்து சம்பவத்தில் மட்டக்களப்பு – செங்கலடி, கணபதிப்பிள்ளை நகரைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் மதுசாந் (வயது 22) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் .



# தொழிற்பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு தேசிய பட்டச் சான்றிதழ் வழங்க தீர்மானம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

“வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு செல்வோரின் நன்மை கருதி எச்.என்.டி.,சிலியட், அத்துடன் இரத்மலானை நைட்டா நிறுவனத்தின் கீழ் வரும் மூன்று வருட டிப்ளோமா பாடநெறி ஆகிய இந்த மூன்றையும் சேர்த்து மாணவர்களுக்கு உயர் தேசியக் கல்வி பட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.”

– இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“எமது மாணவர்கள் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகள் பெறச் செல்லும் போது உயர் தேசிய டிப்ளோமாவுடன் சென்றாலும் அங்கு அவர்களுக்கு உரிய தொழில், சம்பளம் கிடைப்பதில்லை. எனினும் வேறு நாட்டவர்கள்



இரண்டு வருடத்தில் எடுத்துக்கொண்ட பட்டப்படிப்பு சான்றிதழுடன் அங்கு வருகின்றனர். அவர்களுக்கு சிறந்த சம்பளம் வழங்கப்படுகிறது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சிவில், மெக்கானிக்கல் போன்ற துறைகளுக்கு செல்லும்போது பொறியியலாளருக்கு உள்ள திறமை, ஆற்றல் நம்மவர்களுக்கு உள்ள போதும் பட்டப் படிப்பு அதற்குத் தடையாக உள்ளது. இவற்றை கவனத்திற் கொண்டே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நாம் ஐ.எஸ். எல். மற்றும் தொழில் நுட்பவியலாளர் நிறுவனம் உட்பட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு நடத்தினோம். இறுதித் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் எதிர்காலத்தில் இந்தப் பாடங்களுக்கு இணைத்துக் கொள்வோருக்கு பட்டப்படிப்பு வரை செல்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

சிட்னி எக்கோட் மட்டத்தில் இதனை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், யுனிவர் டெக் நிறுவனம் மற்றும் சிலியட் நிறுவனத்திற்கும் அது தொடர்பில் நான் அறிவித்துள்ளேன். இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள முறையில் எச்.என்.டி. உடன் இணைந்து அவர்களுக்கு என். வி. கியூவ்– 6 வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நான் அறிவித்துள்ளேன்.”– என்றார்.

# சிங்கள - பௌத்தர்களின் பொறுமையை கோழைத்தனம் எனக் கருதி விடாதீர்கள்!

## எச்சரிக்கின்றார் வீரசேகர எம்.பி. தெரிவிப்பு


“வடக்கு, கிழக்கில் பௌத்த மரபுரிமைகளை அழித்து அதன் மீது பிற மத அடையாளங்களை வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிங்கள – பௌத்தர்களின் பொறுமையைக் கோழைத்தனம் என்று கருத வேண்டாம். இது சிங்கள – பௌத்த நாடு என்பதால் தான் தமிழ் பிரதிநிதிகள் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.”

– இவ்வாறு தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன 1987 ஆம் ஆண்டு 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களித்து நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். ஆகவே சபாநாயகரை நாங்கள் பாதுகாப்போம்.

அரசமைப்பு பேரவையின் செயற்பாடுகள் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பு



பேரவையின் இரண்டு உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு அரசமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சட்டம் மற்றும் ஒழுங்கை செயற்படுத்தும் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தால் வழங்கப்படவில்லை.

19 ஆவது திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடியால் பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் பாரிய இழுபறி நிலை ஏற்பட்டது. இந்த நிலைமைக்கு அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

வெடுக்குநாறி மலை விவகாரத்தை குறிப்பிட்டுக் கொண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தெற்கில் உள்ள மத சுதந்திரம் வடக்குக்கும் வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிடுகிறார்.

வடக்கில் மத சுதந்திரம் உள்ளதா என்பதை முதலில் ஆராய வேண்டும். வெடுக்குநாறிமலையில் பௌத்த தொல்பொருள் மரபுரிமைகள் பொதிந்துள்ளன. வெடுக்குநாறி மலையில் இருந்த பழமையான பௌத்த தூபி இடித்தழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வெள்ளவத்தையில் உள்ள கோயிலை இடித்து பௌத்த வழிபாடுகளில் ஈடுபட முடியுமா? ஆகவே தெரியாத விடயங்களைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் பேசக் கூடாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் மத்தியில் இனவாதம் பேசி பிரச்சினைகளைத் தூண்டி விடுகிறார்கள். பின்னர் கொழும்புக்கு வந்து போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். மீண்டும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு செல்கிறார்கள்.

இலங்கை சிங்கள – பௌத்த நாடு என்பதால்தான் இவர்கள் இவ்வாறு சுதந்திரமாக வாழ்கிறார்கள். பௌத்த தொல்பொருள் மரபுரிகளை அழித்து அதன் மீது பிற மத அடையாளங்களை காட்சிப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சிங்கள பௌத்தர்களின் பொறுமையை கோழைத்தனம் என்று கருத வேண்டாம்.” – என்றார்.



# இன்று கொடியேற்றம் காணும் மானிப்பாய் மருதடி விநாயகர்!

ஈழத் திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றன. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டுப் பின்னர் பொதுக் கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொது மக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காலம் தவறாத பூசை வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப் பாடசாலை, ஆலய நிர்வாகம் என மிகவும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று (22.03.2024) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் புதுவருடப் பிறப்பு தினமான எதிர்வரும் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

“மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள் பணிந்து
பன்னுவவன் காதை பகர்ந்திடவே – மன்னுபுகழ்
நீட்டு மலைமேல் நிகழ்பா ரதம்வரைந்த
கோட்டுமுகன் பாதங் குறி”

என்று போற்றுகின்ற மருதடி விநாயகரின் அற்புதத்தைக் காணப் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் மகோற்சவ காலத்தில் எம்பெருமானின் சந்நிதானத்துக்கு அலை அலையாகத் திரண்டு வருவார்கள்.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும்.

மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர்.

இவ்வாலயத்தில் மூன்று காலப் பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமானுக்கு விஷேடபூசைகள் நடைபெறும் ஆவணி சதுர்த்தி தினமானது பெருமானது திருச் சந்நிதானத்தை பார்ப்பவர் கண்களை பூரிக்கச் செய்யும். இந்தச் சதுர்த்தி ‘தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர் யாவரும் வந்திவனேவல் செய்திடும்நாள்’ ஆகப் போற்றப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் விநாயக விரதம் ஆரம்பமாகி இருபத்தொருநாள்கள் பிள்ளையார் கதை வாசிக்கப்பட்டு கடைசி நாளில் கஜமுகாசூரசங்காரம் நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மருதமரத்துப் பிள்ளையார் வருசத்தில் பங்குனி மாதத்தில் உற்சவம் ஆரம்பமாகித் தமிழ்ச் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று இரதோற்சவமாகக் கொண்டு ஆரம்ப காலத்தில் இருந்து 2004 ஆம் ஆண்டுவரை பதினெட்டு நாள்கள் உற்சவம் இடம்பெற்றது. 2004 உற்சவத்தையடுத்து புனரமைக்கப்பட்டு கருங்கற் கோவிலாக மிளிர்ந்தது. 2014 ஆம் ஆண்டில் புதுபொலிவு பெற்று 48 நாள்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அதனையடுத்து 25 நாள்களாக உற்சவ நாள்கள் மாற்றம் செய்யப்பட்டு 25 நாள்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டியெடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப்பிச்சை எடுத்தல், பட்டுச் சாத்துதல், தேவாரம் ஓதுதல், வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இந்தக் காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காக நடத்தப்படுகின்றன. மருத மரத்தடியில் வீற்றிருந்தருளும் விநாயகப்பெருமான் வேண்டும் அடியவர்களுக்கு வேண்டும் வரங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

“பூவாழி மன்னர்மநு நீதி வாழி
புகலரிய மடமகளீர் நிறையும் வாழி
ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி
அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி
ஓவாத தவங்கருணை விரதம் வாழி
உலகிலுள்ள சாரசரங்க ளனைத்தும் வாழி
மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்
மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.”

என்று மகோற்சவ காலத்தில் விநாயகப்பெருமானை மெய்யுருகி வழிபாடாற்றி சைவர்களாக சைவ வாழ்வு வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களை நாம் பெற்றுய் வோமாக.

**பண்டிதர், சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்,**
**செயலாளர்,**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**




# நிறைவேற்றுச் சபையின் மீளாய்விற்கு பின் இலங்கைக்கு 337 மில்லியன் டொலர் நிதி

## சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையில் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான இரண்டாம் மீளாய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பொருளாதார கொள்கைகள் தொடர்பான ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிறைவேற்றுச் சபையின் மீளாய்வுக்கு பின்னர் இலங்கைக்கு 337 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி விடுவிக்கப்படுமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், கடன் திட்டத்தின் நியதிகளுக்கு அமைய, உத்தியோக பூர்வ கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தங்களை நிறைவு செய்தலும் பிரதான தனியார் கடன் வழங்குநர்களுடன் கொள்கை அளவிலான ஒப்பந்தங்களை எட்டுவதும் இலங்கைக்கு முக்கியமானது என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

## இணையவழி பாதுகாப்பு சட்டமூலம்:

# தள்ளுபடி செய்யப்பட்ட மனுவை மீள்பார்வை செய்யக் கோரிக்கை

இணையவழி பாதுகாப்பு சட்ட மூலத்தை சட்டமாக்கும் போது, சபாநாயகர் செயற்பட்ட விதத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை புதிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மீள்பார்வைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்.

இந்த மனு கடந்த பெப்ரவரி 29 ஆம் திகதி விசாரணைக்கு ஏற்கப்படாமல் உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.



சட்ட மா அதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகி முன்வைத்த அடிப்படை ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்டு இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இணையவழி பாதுகாப்பு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளமையினால், அதனை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாது என சட்டமா அதிபர் இதன் போது தெரிவித்தார். அதன்படி, மனுவை விசாரணையின்றி தள்ளுபடி செய்ய நீதியரசர்கள் தீர்மானித்தனர்.

இந்த நிலையில், உரிய முறையில் விடயங்களை ஆராயமல் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக, அந்த மனுவை நேற்று மீண்டும் சமர்ப்பித்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனுவை மீண்டும் மற்றுமொரு நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மீள்பார்வைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குமாறு மனுதாரரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேற்று நீதிமன்றத்திடம் கோரினார்.

# இந்தியா - இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் நோக்கத்தை விரிவுபடுத்த முயற்சி என்கின்றார் ஜா

இந்தியாவும் இலங்கையும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் ஊடாக சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் நோக்கத்தை விரிவுபடுத்த முயல்கின்றன என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.




2000 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இலங்கையின் ஏற்றுமதி திறனை மேம்படுத்துவதில் அதன் நோக்கத்தை சிறப்பாக செயற்படுத்தியது எனவும் அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய ரீதியாக இந்தியா வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாகவும் அண்டைய நாடு என்ற அடிப்படையில் இலங்கை அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் சார்பற்ற பொது வேட்பாளராக ரணில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி!

## யாழில் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக போட்டியிடுவார். அவர் அரசியல் சார்பற்ற பொது வேட்பாளராக போட்டியிடுவார் என முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு யாழ் மறை மாவட்ட ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

சந்திப்பின் பின்னர் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதில் வழங்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பான மாவட்டத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் யாழ் மாவட்ட ஆயருடன் கலந்துரையாடி தெரிந்து கொண்டு அது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு



செல்லும் முகமாக இச் சந்திப்பை மேற்கொண்டேன்.

தேர்தல் முறைகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்பது நீண்ட கால கோரிக்கையாக இருந்தது. சிறந்த பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்யும் முகமாக தேர்தல் முறைமைகள் மாற்றமடையவுள்ளன.

எதிர்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 160 உறுப்பினர்கள் தேர்தல் தொகுதி மூலமும் 65 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியாக தேசியப் பட்டியல் மூலமும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக போட்டியிடுவார். அவர் அரசியல் சார்பற்ற பொது வேட்பாளராகப் போட்டியிடுவார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

கடந்த தேர்தலில் கூட ரணில் விக்கிரமசிங்க மக்களுடைய பிரச்சினைகளுக்கு பல தீர்வுகளை முன்வைத்திருந்தார். ஆனால் அவை மக்களிடம் முறையாகச் சென்றடையவில்லை.

எனினும் அவர் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தி மக்களுக்கு சேவையாற்றி வருகின்றார். பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்த நாட்டை பொருளாதார ரீதியாக ஸ்திரமான நிலைக்கு கொண்டுவந்துள்ளார். அவரை தொடர்ந்தும் ஜனாதிபதியாக பதவி வகிக்க மக்கள் ஆணை வழங்குவார்கள்.- என்றார்.

# சிறுபான்மை இனச் சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தல் வெடுக்குநாறிமலை அராஜகத்தை ஒட்டி அறிக்கை

இலங்கையில் இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின சமூகங்களின் உரிமைகளை பாதுகாக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

வவுனியா - வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவராத்திரி தின பூஜை வழிபாடுகளின் போது சிலர் கைது செய்யப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்துக்களின் வழிபாட்டுத்தலங்களில் தலையீடு செய்வதை உடன் முடிவுக்கு கொண்டுவருமாறு இலங்கை அரசாங்கம் தொல்பொருள் திணைக்களத்துக்கு அறிவுறுத்த வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்துக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையின




சமூகங்களின் மத உரிமைகளை உறுதிப்படுத்துமாறு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத்தரப்பினருக்கு உத்தரவிட வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அனுரகுமார திசாநாயக்க கனடாவுக்கு பயணமானார்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க நேற்று முன்தினம் மாலை கனடாவுக்கு புறப்பட்டு சென்றுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவர் இலங்கை மக்கள் மத்தியில் பொதுக் கூட்டங்களை நடத்தவுள்ளார்.

நாளை டொரன்டோவிலும் நாளை மறுதினம் வென்கூவரிலும் மாநாடுகள் நடைபெறவுள்ளன.







# அரவிந்த் கேஜ்ரிவால் கைது; அமலாக்கத் துறை நடவடிக்கை

மதுபான கொள்கை ஊழல் வழக்கில் டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை நேற்று இரவு அமலாக்கத் துறை கைது செய்தது. இதனால், டில்லியில் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

டில்லியில் உள்ள அரவிந்த் கேஜ்ரிவால் இல்லத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சுமார் மூன்று மணி நேரம் விசாரணையில் ஈடுபட்டனர். அதன் பின், அதிரடியாக கைது செய்யப்பட்ட அவர் வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

இதனிடையே, ஆம் ஆத்மி நிர்வாகிகளும் தொண்டர்களும் ஆர்ப்பாட்டத்தை நடத்தி வருவதால், பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து ஆம் ஆத்மியின் அதிஷி தெரிவிக்கையில், "நாங்கள் முன்பு சொன்னது போல டில்லி முதல்வராக அரவிந்த் கேஜ்ரிவால் தொடர்வார் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம். இதை நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறோம். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அவர் சிறையில் இருந்தபடி முதல்வராக செயல்படுவார். அவர் தனது பணியை தொடர்வதை தடுக்க எந்த சட்டமும் இல்லை. அவர் குற்றவாளி அல்ல" என அவர் தெரிவித்தார்.

சிறையில் இருந்தபடி முதல்வராக கேஜ்ரிவால் பணியாற்றும் பட்சத்தில் அது அரசியல் ரீதியாக நெருக்கடிகளை உருவாக்கும் என சொல்லப்படுகிறது. இதற்கு முன்னர் பிஹார் மாநில முதல்வராக இருந்த லாலு பிரசாத் யாதவ், ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட போது தனது பொறுப்பை அவரது மனைவி ராப்ரி தேவி வசம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கடந்த ஜனவரியில் நில மோசடி வழக்கில் ஜார்க்கண்ட் மாநில முதல்வர் ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. அப்போது அவர் முதல்வர் பொறுப்பில் இருந்து விலகி இருந்தார்.

"10 ஆண்டு கால பாசிச பா.ஜ.க. அரசின் தோல்வி மற்றும் எதிர்வரும் மக்களவைத் தேர்தல் தோல்வி பயத்தாலும் டெல்லி முதல்வர் கேஜ்ரிவாலை கைது செய்துள்ளது மத்திய அரசு. இதற்கு முன்னர் இதே பாணியில் ஹேமந்த் சோரனை கைது செய்திருந்தது.

அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஜனநாயகத்தை சீர்குலைக்கும் எந்தவொரு பா.ஜ.க. பிரமுகரும் கைது நடவடிக்கையை எதிர்கொள்வதில்லை. குறைந்தபட்சம் அவர்களிடம் விசாரணை கூட மேற்கொள்வதில்லை. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர்களை தொடர்ந்து குறிவைத்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது பா.ஜ.க" – என்றார்.

"இதுதான் பா.ஜ.கவின் அசல் முகம். இதனால் மக்களின் கோபத்தை பெற்றுள்ளது. அதோடு இது எதிர்வரும் தேர்தலில் இந்திய கூட்டணியின் வெற்றிப் பயணத்தை பலப்படுத்துகிறது" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# அடையாள அட்டை வழங்க உத்தரவிடக் கோரி முருகன் மனு



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு திருச்சி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள முருகன் தனக்கு அடையாள அட்டை வழங்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் முருகன் தாக்கல் செய்துள்ள மனுவில்,

"லண்டனில் உள்ள தனது மகளுடன் சென்று வசிப்பதற்கு விசா எடுக்க விண்ணப்பிக்க போகிறேன். அதற்கு விண்ணப்பிக்க வேண்டும் எனில், புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை கட்டாயம் ஆகும்.

எனவே தனக்கு உரிய அடையாள அட்டையை வழங்கும்படி கடந்த ஜனவரி மாதம் மறுவாழ்வு இயக்குனரிடம் விண்ணப்பித்தேன். ஆனால், அந்த விண்ணப்பத்தின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அடையாள அட்டை வழங்க மறுவாழ்வு இயக்குநருக்கு உத்தரவிட வேண்டும்," – என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ். ரமேஷ் மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது இந்த வழக்கை விசாரிப்பதில் இருந்து விலகுகிறேன் நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்தார்.

இதையடுத்து, முருகனின் வழக்கை வேறு அமர்வில் பட்டியலிடும் வகையில் தலைமை நீதிபதியின் ஒப்புதலை பெற பதிவுத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

# பலஸ்தீனத்துக்கு எதிரான போரில் பட்டினியை ஆயுதமாக்கும் இஸ்ரேல்!

## ஐ.நா. குற்றச்சாட்டு



பலஸ்தீனம் மீதான போரில், பட்டினியை ஆயுதமாக இஸ்ரேல் இராணுவம் பயன்படுத்துவதாக ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது.

பலஸ்தீனம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திவரும் தாக்குதலானது நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், இதுவரை சுமார் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச நாடுகளால் அனுப்பப்படும் உணவு, மருந்து பொருட்களையும் அவர்களுக்கு கிடைக்க விடாமல் இஸ்ரேல் இராணுவம் தடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து விசாரித்து வந்த சர்வதேச நீதிமன்றம், காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கிட இஸ்ரேல் குறுக்கே நிற்கக்கூடாது என உத்தரவிட்டிருந்த போதும் இஸ்ரேல் அதனை கடைபிடிப்பதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், அம்மக்கள் பட்டினியால் உயிரிழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இப்போரில் பட்டினியை இஸ்ரேல் அரசு ஆயுதமாகப் பயன்படுத்துவதாக ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது.

# பாகிஸ்தான் துறைமுகத்துக்குள் தாக்குதல்: 8 பேர் சுட்டுக்கொலை!

பாகிஸ்தானின் குவாடர் துறைமுக ஆணைய வளாகம் மீது தாக்குதல் நடத்திய, 8 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டு இராணவ வீரர்களும் உயிரிழந்துள்ளனர் என கூறப்படுகின்றது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் குவாடர் துறைமுகம் செயல்பட்டு வருகிறது.

இந்த துறைமுகத்தில் அதிகாரிகள் பணிபுரியும் வளாகத்தில் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் புகுந்த பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

துப்பாக்கி சூடு மற்றும் குண்டுகள் வெடிக்கும் சத்தத்தால் துறைமுகத்துக்குள் பெரும் பரபரப்பு நிலவியதுடன், அங்கிருந்த ஊழியர்கள் உடனே பல இடங்களில் பதுங்கி கொண்டனர்.




இதனை அறிந்த இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தினர் என கூறப்படுகின்றது.

இதனையடுத்து இருதரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்துள்ளது. இந்த சம்பவத்தில் இரு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் துறைமுகத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய 8 பயங்கரவாதிகளும் சுட்டுக்கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

உக்ரைனின் கிய்வ் நகரைக் குறிவைத்து ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 17 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காயமடைந்தவர்களில் 4 பேர் மாத்திரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தாக்குதலையடுத்து உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமர் செலென்ஸ்கி உலக நாடுகளிடம் இராணுவ உதவியைக் கோரியுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 22.03.2024




இன்று ஆன்மீக நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகளில் பங்கு கொண்டு ஆறுதல் பெறுவீர்கள். பிரார்த்தனையில் ஈடுபடுவது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

பணியிடச் சூழல் பதட்டத்தை அளிக்கும். பணியிடத்தில் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதன்படி உங்கள் பணிகளை திட்டமிடுங்கள்.

சாதகமான சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். இதனால் துணையை நட்புடன் அணுக முடியும். மகிழ்ச்சியாக இருக்க உங்கள் துணையின் விருப்பபடி செயலாற்றுங்கள்.

பண இழப்பு ஏற்படாமல் இருக்க கவனம் தேவை. பணத்தை சாதுரியமாக செலவு செய்யவும்.

பதற்றம் காரணமாக முதுகு வலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் பதற்றப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உங்கள் அணுகு முறையில் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். இன்று உங்கள் செயல்களை ஒருமுகப்படுத்தி கவனமாக செய்வதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காரணமாக பணி வளர்ச்சியில் தாமதம் காணப்படும். பொறுமையுடன் பணிகளை கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் அதிக நெருக்கம் காணப்படும். சமநிலையோடு இருப்பீர்கள். இதனால் நல்ல மனநிலையில் இருப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். நீங்கள் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். உங்களின் இந்த மனப்பான்மை உங்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் பணியில் வெற்றி எளிதாக கிடைக்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

பாதுகாப்பற்ற உணர்வு காரணமாக உங்கள் ததுணையிடம் பதற்றத்தை வெளிப்படுத்துவீர்கள். எனவே மனதை அமைதியாக வைத்து மகிழ்ச்சியோடு இருங்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். எதிர் காலத்திற்காக அதிக அளவில் சேமிக்க இயலும்.

மன நிறைவாக உணர்வதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஓய்வாக அமைதியாக இருக்க வேண்டிய நாள். உங்களை அதிகமாக வருத்திக் கொள்ள வேண்டாம். முக்கிய முடிவுகளை தள்ளிப்போடவும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணிகளை திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி செயலாற்ற வேண்டும்.

இன்று உங்களிடம் பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். திட்டமிட்டு அதன்படி செலவு செய்ய வேண்டும்.

மன வருத்தங்கள் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. தியானம் மேற்கொள்வது மிகச் சிறந்தது.




இன்று மிதமான பலன்களே காணப்படும். நண்பர்கள் கூட எதிரிகள் ஆகும் சூழ்நிலை உருவாகும். உணர்ச்சி வசப்படாமல் அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருங்கள்.

அதிக வேலைகள் மற்றும் பொறுப்புகளை சுமையாக உணர்வீர்கள். பணிகளை உறுதியுடன் மேற்கொள்வது நல்லது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது அமைதியையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

வரவு – செலவு இரண்டும் இணைந்து காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை பராமரிப்பது நல்லது.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




பதற்றம் காரணமாக இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும். பாடல் கேட்பது திரைப் படம் பார்த்தல் போன்ற வற்றின் மூலம் மகிழ்ச்சி காணலாம்.

பணிகளை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். அதற்கேற்ற படி திட்டமிட்டால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் உணர்வுகளை நகைச்சுவை உணர்வோடு வெளிப்படுத்துவீர்கள். இதன் மூலம் உங்கள் பிரியமானவரிடம் ஆழ்ந்த அன்பு ஏற்படும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக நீங்கள் நரம்பு பிரச்சினையால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் இலக்குகளை அடைவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்ள வேண்டும். இதன் மூலம் உறவின் மதிப்பை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி பிரகாசமாக இருக்கும். சேமிப்பை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஆக்கபூர்வமான நாளாக இருக்கும். நீங்கள் புத்துணர்ச்சியுடன் உறுதியாக இருப்பீர்கள். புதிய முயற்சிகள் லாபகரமாக இருக்கும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உற்சாகத்துடன் பணியாற்றுவீர்கள்.

நீங்கள் உணர்சிவசப்படுவீர்கள். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பணப்புழக்கம் காணப்படும். நீங்கள் அதிகமாக சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். அதனால் நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.03.2024

## தனுசு

இன்று அதிக பொறுப்புகளை நீங்கள் சந்திப்பதன் காரணமாக பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டாம். பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும்.

அதிக பணிச்சுமை காணப்படுவதன் காரணமாக இன்றைய பணிகளை அமைதியாக மேற்கொள்ளுங்கள். பணிகளை ஆற்ற சிறப்பாக திட்டமிடுங்கள்.

இன்று மாறுபடும் மனநிலை காரணமாக எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க வேண்டும்.

நிதிநிலைமை சுமாராக இருக்கும். இன்று அதிக செலவுகள் காணப்படும். நிலைமையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

## மகரம்

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். மனதில் நம்பிக்கையோடு செயல்பட்டால் வெற்றி நிச்சயம்.

கடினமாக உழைத்தாலும் உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்காது. இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். பணியில் சவால்களை சந்திப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமை மந்தமாக இருக்கும். பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படாது.

சளி மற்றும் இருமல் உபாதைகள் ஏற்படலாம். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.

## கும்பம்

இன்று சுறுசுறுப்பாக காணப்படுவீர்கள். உங்களின் திட்டமிட்ட எளிய அணுகுமுறை மூலம் நன்கு வளர்ச்சி பெறுவீர்கள். உங்களிடம் அதிக உறுதியும் தைரியமும் காணப்படும்.

பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணியில் உங்கள் அணுகுமுறை கூடுதல் ஊதியத்தை பெற்றுத் தரும்.

உங்கள் நகைச்சுவை உணர்வின் காரணமாக துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் சேமிப்பு கணிசமாக உயரும். இன்று அதிக பணம் கிடைக்கும்.

உங்களின் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று திடமாக காணப்படுவீர்கள்.

## மீனம்

இன்று உங்கள் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்வீர்கள். இன்று எடுக்கும் முடிவுகள் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்களில் வேகமாக இருப்பீர்கள்.

உங்கள் பணியில் வளர்ச்சி காணப்படும். நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் தனித்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்களின் நகைச்சுவை அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் நிதிநிலைமை முன்னேற்றகரமாகவும் திருப்திகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.





